பண்பாட்டலுவல்கள் அலகு சுற்றுநிருபம் : **2024/05**

எனது இல : NP/03/09/CMA/03
பண்பாட்டலுவல்கள் அலகு,
செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
12.01.2024.

சம்பந்தப்பட்டவர்களுக்கு,

# போட்டிகளுக்கான நடுவர்கள் குழு - 2024

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகினால் மேற்கொள்ளப்படும் விருது தெரிவுகளில் நடுவர்களாக பணியாற்றுவதற்காக கலைத்துறையில் ஆற்றலுள்ள கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## நடுவர்குழு அமைப்பு

1. குறித்த நடுவர்கள் பணியானது தற்காலிகமானதாகும்.
2. நடுவர்களது பணிக்காலம் இரண்டு ஆண்டுகளாகும்.
3. நடுவர்கள் பணிக்கான கொடுப்பனவுகள் திணைக்கள சுற்றுநிருபங்களிற்கு அமைவாக வழங்கப்படும்.

**கோரப்படும் துறைகள்**

1. ஆக்க இலக்கியங்கள்
2. ஆய்வுகள்
3. ஆன்மிகம்
4. நாட்டாரியல்
5. மொழிபெயர்ப்பு
6. சூழலியல்
7. சமூகவியல்
8. கலைமரபும் பண்பாடும்
9. அறிவியல்
10. வரலாறு மற்றும் தொல்லியல்
11. கிராமிய கலைகள்
12. தொழில்நுட்பம்
13. நடனம்
14. குறும்படம்
15. ஓவியம்
16. சிற்பம்
17. இசைநாடகம்
18. இசைக்கலை (வாய்ப்பாட்டு, பண்ணிசை, இசையமைப்பு)
19. வாத்தியக்கலை (தவில், நாதஸ்வரம், புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், வீணை, ஓர்கன், ஆர்மோனியம், உடுக்கு, பறை, கடம், முகர்சிங் போன்றன.)
20. வாத்தியக்கருவிகள் உருவாக்கம் (தவில், நாதஸ்வரம், மிருதங்கம், உடுக்கு, பறை, போன்றன.)
21. கூத்து (வடமோடி, தென்மோடி, சிந்துநடைக்கூத்து, மன்னார்ப்பாங்கு, முல்லைமோடி)
22. கிராமியக் கலைகள் (கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், வசந்தன்கூத்து, வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம், ஒயிலாட்டம், மகுடி போன்ற தொடர்புடைய கலைகள்)
23. ஒப்பனைக்கலை (நாடகங்கள், கூத்துக்கள், நடனக் கலைத்துறைகளுக்கானவை)

## நடுவர் குழு தெரிவு முறை

பண்பாட்டலுவல்கள் அலகின் விருது தெரிவுகளிலும் பிரதேச செயலகங்களினால் கலாசார செயற்றிட்டங்களினூடாக முன்னெடுக்கப்பட்டுவரும் போட்டிகளுக்கும் நடுவர்கள் தெரிவானது பின்வரும் ஒழுங்கு முறையில் தெரிவு செய்யப்படுவர்.

1. நடுவர்கள் தெரிவு தொடர்பாக பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.
2. விண்ணப்பங்கள் பெறப்பட்டு தகுதியானவர்கள் நேர்முகத்தேர்வின் மூலமோ அல்லது நடுவர் தெரிவுக்குழுவின் மூலமோ தெரிவு செய்யப்படுவர்.
3. தெரிவு செய்யப்பட்ட நடுவர்களுக்கு தெரிவு தொடர்பாக எழுத்து மூலமான அறிவித்தல் வழங்கப்படும்.
4. போட்டிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் குறித்த போட்டிக்குரிய நடுவருக்குரிய விண்ணப்பம் அனுப்ப முடியாது.

## நடுவர்களுக்கான தகுதிகள்

1. நடுவர்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் தாங்கள் விண்ணப்பிக்கும் துறையில் பத்து வருடத்துக்கு மேற்பட்ட அனுபவத்தினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பிக்கும் துறையில் இதுவரை அவர் ஆற்றிய பங்களிப்பு ஆவணங்கள் மூலமாக அல்லது கலாசார உத்தியோகத்தர் மூலமாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
3. இலக்கியத்துறை சார்ந்த நடுவர்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் இலக்கிய கர்த்தாக்களாக இருப்பின் தங்கள் துறைசார்ந்த இலக்கிய முயற்சிகளில் குறைந்தது இரண்டு நூல்களையாவது வெளியிட்டிருக்க வேண்டும்.
4. கலைத்துறை சார்ந்த நடுவர்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் விண்ணப்பிக்கும் நடுவர் துறையில் பத்து வருடங்களுக்கு மேற்பட்ட கலை அனுபவத்தினை கொண்டிருப்பதோடு அதனை சான்றுகளுடன் உறுதிப்படுத்த வேண்டும்.
5. துறை சார்ந்த கலைத்துறையில் குறைந்தது ஐந்து படைப்புக்களையாவது சொந்தப்படைப்பாக செய்திருத்தல் வேண்டும்.
6. சகல துறைகளுக்கும் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் நாற்பத்தைந்து வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
7. விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தினை நிரந்தர வசிப்பிடமாக கொண்டவராக இருத்தல் வேண்டும்.
8. விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளின் கலை இலக்கியப் படைப்புக்கள் சமூக வெளியில் அங்கீகரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

மேற்படி நிபந்தனைகளுக்கமைவாக விண்ணப்பிக்க விரும்புபவர்கள் பின்வரும் முகவரிக்கு 31.03.2024 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். உரிய திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவத்தினை பண்பாட்டலுவல்கள் அலகில் அல்லது தங்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தரிடம் அல்லது கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பம் அனுப்பும் முகவரி : பிரதிப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் அலகு.
செம்மணிவீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

இணையத்தள முகவரி : www.edumin.np.gov.lk

தொலைபேசி இல. : 0212054105 / 0213202568

ம.பற்றிக் டிறஞ்சன்,
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.
வடக்கு மாகாணம்.

ம.பற்றிக் டிறஞ்சன்
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்

# விண்ணப்பம்

01. முழுப்பெயர் :…………………………………………………………………………….

02. தற்காலிக முகவரி:……………………………………………………………......................

03. நிரந்தர முகவரி :……………………………………………………………………

04. தொலைபேசி இலக்கம்:…………………………………………………………………

05. தொழில் :………………………………………………………………………………

06. தேசியம்(**Nationality**):……………………………………………………………….....

07. பிரதேச செயலாளர் பிரிவு:……………………………………………………...................

08. விண்ணப்பிக்கும் துறை ……………………………………………………………

**09.** கல்வித் தகமைகள்

…………………………………………………………………………………………

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

10. துறை சார்ந்த தகமைகள்:

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………....

…………………………………………………………………………………………

……………………..

விண்ணப்பதாரியின் ஒப்பம்.